செ.வெ.எண்:52 நாள்:27.11.2020

# பத்திரிக்கைச் செய்தி

வேலைவாய்ப்பு அலுவலக பதிவினை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றுவதற்கு ஏற்கனவே 2016-ஆம் ஆண்டு வெளியிட்ட அரசாணையின்படி 1.வட்டாட்சியர் அளவில் வழங்கப்படும் குடும்ப குடிப்பெயர்ச்சி சான்றிதழ் 2. வட்டாட்சியர் அளவில் வழங்கப்படும் இருப்பிடச் சான்றிதழ் 3.குடும்ப அடையாள அட்டை (அ) ஆதார் அட்டை (அ) நிலையான கணக்கு அட்டை (அ) வாக்காளர் அட்டை (அ) கடவுச்சீட்டு (அ) ஓட்டுநர் உரிமம் (அ)முன்னாள் படைவீரர்களும்கான அடையாள அட்டை (அ) மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை இவைகளில் ஏதாவது ஒன்றினை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்நடைமுறையை எளிமைப்படுத்தும் விதமாக, தற்போது வெளியிடப்பட்டுள்ள அரசாணையின்படி அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையத்தில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள் அவர்களது வேலைவாய்ப்பு பதிவினை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்ற பதிவுதாரர்களால் சுயசான்றளிக்கப்பட்ட குடும்ப அடையாள அட்டை (அ) ஆதார் அட்டை (அ) வாக்காளர் அட்டை (அ) கடவுச்சீட்டு (அ) ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தை மட்டும் சமர்ப்பித்தால் போதுமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது

எனவே, அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையத்தில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள் இவ்வறிவுரைகளின்படி பதிவுமாற்றம் செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**